*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.: **CC**.404/2023*

*Deposition of Witness for Prosecuting/Defence/Court **PW**- 1 (**LW**-1)*

*Name / Father's Name: திரு.ரமேஷ் த/பெ. ராஜகோபால்*

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.12.2023.*

துவக்க நேரம் 12.17

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள தொண்டமான்துறை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 12.08.2023ம் தேதி மாலை சுமார் 05.15 மணியளவில் நான், எனது ஊரில் இருந்தபோது எனது தம்பி சுந்தரமும், அவர் வேலை செய்யும் நிறுவனத்தை சேர்ந்த முஜிபூர் ரகுமான் அவர்களின் மகன் அகமது அலியும் இருசக்கர வாகனத்தில் ஆத்துாருக்கு பொருள் வாங்கவேண்டி வந்துவிட்டு, திரும்ப ஊருக்கு வந்துகொண்டிருந்தபோது ஓதியத்துார் பிரிவு ரோடு, கோபாலகிருஷ்ணன் ரைஸ் மில் அருகே இருசக்கர வாகனத்தை ஒட்டிவந்த அகமது அலி வேகமாக வந்து பிரேக் பிடித்ததால் நிலைதடுமாறி இருவரும் கீழே விழுந்துவிட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள்.

2) நான் வந்து சம்பவயிடத்தில் பார்த்தபோது எனது தம்பியை ஆத்துார் அரசு மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றதாக சொன்னார்கள். நான், ஆத்துார் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது எனது தம்பி இறந்துவிட்டதாக சொன்னார்கள். அவருக்கு தலையில் அடிபட்டிருந்தது. அகமது அலிக்கு காயம் எதுவும் இல்லை.

3) நடந்த சம்பவத்தை குறித்து கெங்கவல்லி காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(அந்த புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) நான் 9ம் வகுப்பு படித்துள்ளேன். விபத்து பற்றி யார் எனக்கு தகவல் சொன்னார்கள் என்றால் சதாம்உசேன் என்பவர் சொன்னார். எத்தனை மணிக்கு தகவல் சொன்னார் என்றால் சரியாக நியாபகம் இல்லை. நான் மாலை சுமார் 06.00 மணியளவில் சம்பவயிடம் வந்துவிட்டேன்.

2) புகார்மனுவினை எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் கெங்கவல்லி காவல் நிலையத்தில் கொடுத்தேன். புகார் மனுவினை யார் எழுதினார்கள் என்றால் நான்தான் எழுதினேன். நான் எழுதிய புகார் மனுவில் ஏதேனும் அடித்தல், திருத்தல் செய்தேனா என்றால் இல்லை.

3) புகார் மனுவில், ஒயிட்னர் வைத்து 3-4 இடங்களில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி திருத்தங்களை யார் செய்தார்கள் என்றால் நான்தான் செய்தேன். போலிசார் கேட்டுக்கொண்டதால்தான் மேற்படி திருத்தங்களை செய்துகொடுத்தேன் என்றால் சரிதான். புகார் மனுவினை போலிசார் சொன்னதன் அடிப்படையில் தான் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான்.

4) போலிசார், என்னிடம் புகார் மனுவினை கொடுத்த பிறகு விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. ஆஜர் எதிரி ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் முன்பாக சென்ற இருசக்கரவாகனம் திடீரென பிரேக் போட்டதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். ஆஜர் எதிரியின் கவனக்குறைவால் இவ்விபத்து ஏற்படவில்லை என்றும், அவருக்கு முன்பாக சென்ற இருசக்கர வாகனம் திடீரென பிரேக் போட்டதால்தான் விபத்து ஏற்பட்டது என்றும் சொன்னால் சரிதான்.

முடிவு நேரம் 12.31

ஒம்/-S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.: **CC**.404/2023*

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW**- 2 (**LW**-5)*

*Name / Father's Name: திரு.மதன்குமார் த/பெ. குப்புசாமி*

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.12.2023.*

துவக்க நேரம் 12.32

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள தொண்டமான்துறை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 12.08.2023ம் தேதி மாலை சுமார் 05.15 மணியளவில் நான், எனது ஊரில் இருந்தபோது எனது உறவினர் சுந்திரம், அவர் வேலை செய்யும் நிறுவனத்தை சேர்ந்த முஜிபூர் ரகுமான் அவர்களின் மகன் அகமது அலியுடன் இருசக்கர வாகனத்தில் ஆத்தூருக்கு பொருள் வாங்கவேண்டி சென்றுவிட்டு, திரும்ப ஊருக்கு வந்துகொண்டிருந்தபோது ஓதியத்தூர் பிரிவு ரோடு, கோபாலகிருஷ்ணன் ரைஸ் மில் அருகே விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள்.

2) நான் வந்து சம்பவயிடத்தில் பார்த்தபோது சுந்தரத்தை ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றதாக சொன்னார்கள். நான், ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது சுந்தரம் இறந்து கிடந்தார். அவரது பிரேதத்தின்மீது போலிசார், என்முன்பாக விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நடந்த சம்பவத்தை குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். நான் கேள்விபட்டதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 12.39

ஒம்/-S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.